786

முபஸ்மிலன்

இருஷஹானுக்குஞ் சர்தாராகிய ரசூலேகரீம்
நபி முஸ்தபா (ஸல்) அவர்கள்மீதும்,
மற்றுமுண்டான
அவுலியாக்கள்மீதும் பாடிய

# சங்கீதப்பாமணி.

முதற்பாகம்.

இஃது

டையூ முஸ்லீம் சங்கத்தின் ஜீவிய அக்கிராசனாதிபதியும்,
லாண்டு லார்டுமோகிய,
ஜனுப் P. E. வருசை இபுராஹீம் சகோதரர்
P. E. செய்யது இபுராஹீம் புதல்வரும்,
ஊம்பையிங்பதி,
முஸ்லீம் வாலிப வித்தியாபிவிர்த்தி சங்க
வித்வானும்,
திருவீரநகர் வாசியுமாகிய இசைத்தமிழமிர்தம்,
P. E. S. முஹம்மது ஹமீத் சுல்தான் பாவலர்
அவர்களால் இயற்றப்பெற்று,

---

பரமக்குடி,
...ன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
1930. அணா 4

8 DEC 1930
SCANNED
SCANNED

பிஸ்மில்லாஹி.

# முன்னுரை.

முஸ்லீம் சகோதரர்காள்!

இவ்வகிலத்தில் கற்றோர் பலர் பற்பல நூலியற்றுகின்றனர். ஆனால் நம் சகோதரர்களோ நம் சுத்த சத்தியமதக் கொள்கையான பாடல்கள் தெரியாதிருந்து பிறர்மதத்தின் பாடல்களைப் பாடிக் களிப்புறுகின்றனரென்பது வெளிப்படை. இத்தன்மையாயிருக்கின்ற மக்களின் சீர்திருத்தத்தை முன்னிட்டு எங்கள் சங்கவித்வானும், திருவிரகர் வாசியுமாகிய செந்தமிழமிர்தம் ஜனப் **P. E. S.** முஹம்மது ஹமீத் சுல்தான் பாவலரவர்களால் நமது நாயகம் எம்மறைக்குந் தாயகம் நபிகள் திலகம் ரசூலேகரீ மீதும், மற்றுமுண்டான நல்லடியார்களாகிய அவுலியாக்கள்மீதும் பாடி "சங்கீதப்பாமணி" என்ற பெயர் சூட்டி இயற்றியிருக்கின்றனர். இந்நூலை நம் சகோதரர்களுக்கியற்றித் தந்திருப்பது போற்றத்தக்கதே. ஆசிரியர் பாடியிருக்கும் பாடல்கள் சிறிதாகவும், இலகுவில் அறியக்கூடியதாகவும் ஹிந்துஸ்தான், பார்ஸி முதலிய இராகங்களில் நூதன வர்ணமெட்டுகளால் பாடியிருப்பதால் ஒவ்வொரு சகோதரரும் வாங்கிப்படித்து இது போன்ற பல நூலியற்ற ஆசிரியருக்கு ஊக்கந்தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஊம்பையிங்பதி
பர்மா.
1—5—30.

முஸ்லீம் வாலிப,
வித்யாபிர்த்தி சங்கத்தார்கள்.

இ லா ஹி

### அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அழிவிலாப் பொருளேயாதி யஹதான வாயுன்
அருமையான தூத ரஹ்மது நபியவர்மேல்
அழகிய சங்கீதப் பாமணி பாடுவதற்கு
அருளாள னேயெனக் கருள்புரிகுவாய்.

### இங்கிலீஷ் நோட்.

1. ஏகபெரியோனே ரஹ்மானே
யெனையாளுவாய்
எளியன்றுயர் தீர்ப்பதற்கு
நீதனே சற்குருவாய் (ஆதி)

2. ஆதியே யுன்னையேநாடி
யன்புடன் கவிபாடினேன்
ஜோதியான துய்யவா
துதித்துயுன்னைத் தேடினேன் (ஆதி)

3. அருள்கடாக்ஷ ஞானமும்
அருந்தமிழின் ஞானமும்
அன்புடனே யெந்தனுக்
கருள்புரிவா யின்னேரமே (ஆதி)

4. ஜெயவீர நகரின்வாசன்
சிறியேன் றுயர்தீர்ப்பீரே
செந்தமிழ் ஹமீது தாஸன்
சேயன்பாவம் பொருப்பீரே (ஆதி)

அறுசீரடி விருத்தம்.

ஆதத்தி லிருந்தைம்பத் தோராம் தலைமுறையில்
அப்துல்லா தவத் தாலுதித்தநபியே
அவனிபுகழ் மக்கமெனுந் திவ்ய க்ஷேத்திரத்தில்
அனேககா ரணங்கள்செய்தநபியே
ஹபீபரசன் முன்மதியை யழைத்தசற்
கருணகடாக்ஷ நபியே
கசடன புஜகிலைப துரினில்வென் றிட்டஹா
மீமெனுஞ் சித்ரநபியே
சங்கீதப் பாமணி யெனுநா லியற்றியே
சரணடிபணிந்தேன் நபியே
சாயுக்ஷ வாயுமை நம்பும்ஹமீத் தாஸனே
கார்த்துரக்ஷிப்பீர் நபியே.

## நபி நாயகத்திலகமீதுபாடிய துதி.

தசரதராஜகுமாரா—என்ற மெட்டு.

பல்லவி

ஆமினளீன்றதவ பாலா குண சீலா
அதி லோலா அனுகூலா (ஆ)

சரணுநுபல்லவி

குறைஷிக் குலநவ மணியா யுதித்தோரே
கோமானின் றிருத்தூத ராகவந்தோரே
குவலையம் புகழ்மக் காவில்பிறந்தோரே
குதாவினருமைத்திருத் தூதா மஹ்மூதா
மலர்ப் பாதா அருள்நாதா (ஆ)

புருக்கான் வேதத்தை புகட்டிய நாதா
பூலோகமெங்கும் புகழ்ந்திடும் நீதா

புராக்குபரி யின்மே லேறிடும் வேதா
புண்ணியநற்குண பூவே யருள்கோவே
ஏகன் றிருவே முஸ்தபாவே (ஆ)

அகிலமெல்லா மெச்சிடு மதிபரே நாலா
ஆயிஷா கதிஜாவை மணந்திட்ட லோலா
அடிமை முஹம்மதமீத் தாஸனைமேலா
அஹ்மதி ரசூலே காப்பீர் துயர் தீர்ப்பீர்
சுவனஞ்சேர்ப்பீர் யெனைப்பார்ப்பீர் (ஆ)

தயவில்லையா—என்றமெட்டு.

பல்லவி

தயவில்லையா தாஹாயிரசூலே யென்மேல் (தய)

அநுபல்லவி

தானவன்றூதா மஹ்மூதா மலர்பாதா இன்னமுந் (தய)

மகுடம்

தவக்கொடியி லேசிறந்த தயாபரகுண சீலரே (தய)
நல்புருக்கான் வேதத்தி னவமணியாகிய பீரே (தய)
நானிலத்தோர் போற்றும் நெயினூரி ரசூலே (தய)
மயில்வடிவா எஃகின்மரந்தனி லுற்றோரே (தய)
ஆதத்திவிருந் தைம்பத்தோர் தலைமுறையில் விளங்கியோரே(தய)

சரணம்

பூலோக மாய்கையிலே புத்திப்பட்டுச் சித்தங்கெட்டு
புலம்பித்தவிக்கிறேன் மண்மேலே
புண்யநற் குணசீலராகிய மஹ்மூதரே (தய)

பண்பாகவுமை பணிந்திட்டேன் பதமலர் முத்திட்டேன்
பயஹாம்பரே நினைந்திட்டேன் பாலன் முஹம்மதமீதுயரைத்
தீர்க்க இன்னமுந் (தய)

முஹம்மதியர்மதத்தியில்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

1. பார்புகழுமக்கா பதியினிலேயுதித்த
பயஹாம்பரென்னும் நாதரே—ஏகவல்லோனின்
பாங்கான திருத்தூதரே
பார்த்தவாதிசய மேயடைந்திட
பகைவர்களுள்ள மேஙடுங்கிட
பாக்கியமானசீலரே—புராக்கிலேரி
படைத்தோனைக் கண்டலோலரே (பா)

2. ஆமினாள் தன்வயற்றி லன்பர்வாசனையுடன்
அதிசயமான பாலரே அழகியமங்கை
ஆயிஷாமறிய மணாளரே
அரசர்கள்மனம் பதைத்திட
அரணெடியி லேவென்றிடும்
அலியாரின் மாமனாரே அண்டினோரை
ஆதரிக்கும் செயினாரே (பா)

3. கானகமானுடும்பின் கஷ்டங்களைநீக்கிய
கடாக்ஷமான வேதரே கஹனோர்கள் போற்றும்
காரணமுள்ள நாதரே
கத்தோனின்றிரு தூதராகிய
கதிஜாவை மணந்தமணாளரே
ஹமீதா துயரைத்தீர்ப்பீரே தங்களோடு
கஹனசுவர்க்கஞ் சேர்ப்பீரே (பா)

ஸக்மிதில்கோனமே என்ற ஹிந்துஸ்தான்.

பாட்டு

நாதா னாயகமே நபி
நாதர் முஹம்மதுவே (நா)

கேஜல்

1. நற்குணுதி சயசீலரே
நற்புட னமைந்த லோலரே
நாட்டத் துடனேபணிந்தே
நயனமுடன் கார்ப்பீரே
நாதா ஞயகமே நபி (நா)

கேஜல்

2. மதிஞநகர்க் கரசரானதேவே
மதியை யழைத்துக் காட்டியகோவே
மங்கை கதிஜாவையு
மணமுடித் தனற்பூவே
மணியே முஹம்மதுவே தீன்
மார்க்கத் தில்சிறந்த நபி (நா)

கேஜல்

3. கட்டித்தசையைப் பெண்ணுக்கிவைத்த
மட்டிக்காபிரை தீனுக்கழைத்த
கானகத்து மானுக்குப்
பிணையாகவு மிருந்தவா
காக்ஷிகாட்டியோரே மிக்க
காரணம்விளைத்த நபி (நா)

கேஜல்

4. ஜெகமெங்கும்புகழ் ஜெயவீரவாசன்
செந்தமிழ் முஹம்மதமீது தாஸன்
சிறியவன் றுயர் தீர்க்கவேயா
செய்யமீதே யருள்புரிகுவீர்
ஜெகத்தோர் போற்றுஞ்சீலா யா
ஸீன் முஹம்மதுவே நபி (நா)

உலகமே நமக்கென்ன—என்ற மெட்டு.

பல்லவி

அஹ்மது நன்னபியே அடியெனைக்காரீர்

அநுபல்லவி

அடியெனைக்காரீர் ஆதரவுதாரீர் (அ)

சரணம்

1. அப்துல்லா பாலா ஆயிஷாமணாளா
ஆகிர் நபியாய்வந்த அஹ்மதே மேலா (அ)

2. குறைஷிக் குலமணியே குயிலோசையின் தொனியே
கோமானின் திருதூத ரென்கனியே (அ)

3. பாத்திமாவின் தந்தை பார்ப்போர்க்கு விந்தை
பாங்குடனேயுடுத் திடுவாரேகந்தை (அ)

4. சிங்கமாய் விளங்கும் யெங்குமே துலங்கும்
செய்யதி ரசூலென்ற நாமமே முழங்கும் (அ)

5. ஜெயவீர நகர்வாசன் செந்தமிழ் வித்வதாஸன்
சிறியெனை யெந்தநேரங் கார்ப்பீரே நேசன் (அ)

---

காக்ஷிகண் காக்ஷியே—என்ற மெட்டு

பல்லவி

பயம்வேண்டாம் நெஞ்சமே பார்ப்பவ ரில்லையென்று (பய)

அநுபல்லவி

பயஹாம்பர்நபி பாதமடி யுள்ளமட்டும் (பய)

சரணங்கள்

1. பார்புகளுமக்கா பதியினிலுற்றவர்
பற்பல காரணஞ்செய் நற்பதவி பெற்றவர்
பங்கான நபிகளுக்கு முத்திராங்க முற்றவர்

படைத்தோ னிடத்தில் மன்றாட்டம்—கேட்டு
பாலன் றுயர்தீர்ப்பீர் நாட்டம்—கொடிய
பகைவர் தீங்கைவிட் டோட்டம்—செய்
யாஸீன் முஹம்மதே ஜேஷ்டம்
பக்தியுடன பாடும் நத்தியுமைனுடும்
சக்தியுரவோடும் ஹத்தனையே தேடும் (பய)

2. ஆதிமுதல்மணி யாகவந் துதித்தவர்
அஹதான வன்றிரு தூதராக வந்தவர்
அப்துல்லா வின்புத்ர ராகவே பிறந்தவர்
ஆகிர்நபியாக வந்தோரே—மிக
அருமைகாக்ஷி தந்தோரே—யுத்து
ஹானைப்பேச வைத்தோரே—எங்கள்
ஹாமிமெனும்நபி நீரே
ஹமீதுதாலன் பாட்டு
அருள்தரவே கூட்டு
அடியெனின் தேட்டு
ஆதரிப்பீர் கேட்டு (பய)

---

சுஜனஜீவனு—என்ற மெட்டு

பல்லவி

அஹமது நாதரே ஏக
ஆதியின்றூதரே நபியே (அ)

அநுபல்லவி

அப்துல்லா பாலரே மங்கை
ஆயிஷா மணாளரே
அண்டினேன் யுமைத்தேடினேன் கவிபாடினேன் நபியே (அ)

சரணங்கள்

1. ஹாஷிங்குலத்து தித்தநாதரே
ஹாமீமெனும் நபிநெயினாரே
கருணை தயாளரே      மதினாக்
கரசரும் நீரே
காவல்தேடிய பாலனையே காப்பாற்றுவீரே நபியே (அ)

2. தயாபரகுண சீலராகிய
தசையதை பெண்ணாக்கிய
தாஹாயாபீரே      சிறு
தாஸனைக்காப்பீரே
தக்கோனின் றிருதூதரான மஹ்மூது நபியே (அ)

3. ஜெயவீர நகரில்வாசன்
செந்தமிழ் ஹமீது தாஸன்
செப்புங் கவியே      விளங்கச்
செய்குவீர் நபியே
ஜகமெங்கும் புகழுஞ்செய் யதிரசூல் நபியே (அ)

சுருளிமலைமீதில்—என்ற மெட்டு.

கண்ணிகள்

1. அஹதானவன்றிரு தூதா—மறியம்
ஆயிஷர்வின் மஹ்மூதா—தங்கள்
அடிமை துயரைத் தீர்க்க
அதிவிரை வாகவாரும் நாதா நபி வேதா

2. நாளைமகுஷரினில் காரும்—எனை
நாடிசுவர்க் கமதில்சேரும்—தினம்
நம்பியே யுமதுதிரு
பதமலர் பூசித்தேனே திருவே அருள் குருவே (அ)

3 சிராத்துல் முஸ்தகீம்பாலங் கடக்க—அருள்
செய்குவீரே மிகநடக்க—இவன்
செய்தபாவங் கள்பொருக்க
செய்யநி ரசூலேஹூஆ செய்வீர் துணைபுரிவீர் (அ)

4. பாங்கான ஹௌளுல் கௌதர்காட்டி—மிக
பண்புடனே யெந்தனுக்குப் புகட்டி—வழை
பாலன் முஹம்மதமீது
தாஸனின் றுயரைத் தீர்க்க வாரீர் களிதீரீர் (அ)

ஜென்னிதனிலிருக்கும்—என்ற மெட்டு

கண்ணிகள்

1. நானிலத்தில் சிரந்த நெயினரி ரசூலே
நம்பு மேழையைக் கார் கார் கார்
நாடினேன் மலர் சூடினேன்
நவிலாள னின்றிருதூத ராகவந்தோரே
நல்சுவர்க்க மதில் சேர் சேர் சேர் (நா)

2. வெள்ளானையின்மீது வேகமாகவந்து
வெரியனையேகண் பார் பார் பார்
வேதரே மஹ்மூதரே
வினைகளையே நீக்கி ஹௌளுல் கௌதரை
விருப்பமுடனே யூட்டு வீர் வீர் வீர் (நா)

3. பாத்திமாவின் தந்தை பயஹாம் பரேயிந்த
பாலன்றுயரதைத் தீர் தீர் தீர்
பாடினேன் யுமைத்தேடினேன்
பதமலர்யென் னேரமுமறவாஹமீத்
பாவலனையே கார் பீர் பீர் பீர் (நா)

வாரும் நாரதமுனியே—என்ற மெட்டு.

பல்லவி

மதினா நகர்க்கரசரே மஹ்மூது நபியே திரு (ம)

அநுபல்லவி

புருக்கான் மறைநூலா போற்றுங்குண சீலா
புலம்பித் தவிக்குஞ்சிறு பாலனைக்காக்க வாரீர் திரு (ம)

சரணம்

ஆமினா வீன்றபாலா ஆயிஷா மணந்தலோலா
அண்டினோரைக் காப்பாற்று மாகிர் நன்னபியே மேலா
அடிபணிந்திடு மிடுமைகளோடிய
பாலன் முஹம்மதமீத் படுந்துயர் நீக்கிட (ம)

---

பச்சைமலை பவளமலை—என்ற மெட்டு.

கண்ணிகள்

1. பார்புகழுமக்கா பதியில் பிறந்தோரே—மக்கா
பதியில் பிறந்தோரே—இந்தப்
பாலன்துயர் தீர்க்கவே பார்க்கவருவீரே (பா)

2. ஹாஷிம் குலத்துதித்த கண்மணியே நாதா—நபி
கண்மணியே நாதா—இந்தக்
கசடன்முகம் பார்க்கவே வருகுவீரே வேதா (பா)

3. கானகத்து மானுடும்பு கண்டுபேசும் நாதா—மானுடன்
கண்டுபேசும் நாதா—தசைக்
கட்டியை பெண்ணாக்கிய யாஸீன்மஹ்மூதா (பா)

4. பதுரிப் படைதனிலே பகைவரையே நோக்கி—கொடிய
பகைவரையே நோக்கி—பிடி
மணலா லெறிந்ததினால் மாண்டார்களே தாக்கி (பா)

5. நாற்பதாம் வயதுதனில் நபிபட்டம் பெற்ருேர்—ஏகனிடம்
நபிபட்டம் பெற்ருேரே—நல்ல
நான்காவது வேதந்தன்னை ஒப்புக்கொண்டோர் நீரே (பா)

6 சிங்கக்கொடி பரக்குஞ்ஜெப வீரநகர்வாசன்—சிறியேன்
ஜெயவீரநகர் வாசன்—கவி
செந்தமிழ் முஹம்மதமீத் செப்பிடுமுல்லாசன் (பா)

---

சுயராக்ஷியம்திக தூரமில்லை—என்ற மெட்டு.

கண்ணிகள்.

1. மதினு நகர்க்கரசர் மஹ்மூது நன்னபியே
மைந்தன் தனைக்கார்க்க வருவீரே
மதியையழைத்து மகிமைகள் காட்டிய
மஹாராஜரே யெனைக் கார்ப்பீரே (ம)

தொகையரு

பதுரிப்படையினில் பகைவரை மணலால்
பற்றியெரிந்த வீரா
பார்த்தோர் ரஜிஜபிக்க பார்புகழ் மக்காவிலுதித்த
பயஹாம்பரேஹ்மீரா

பாட்டு

2. ஹாஷிம் குலத்திலுதித்த காரணமுள்ள
ஹாமீமெனும்நபி செயினுரே
கதிஜா ஆயிஷாவை கடிகமணம் புரிந்த
கடோசி நபியாய் வந்தயாபீரே (ம)

தொகையரு

ஹபீபரசன் தனையை பெண்ணுரு வாக்கிவைத்த
கஸ்தூரிவாச நபியே
கானகத்து மானுடும்புட னுரையாடிய
தாஹாயா நபியே

பாட்டு

3\. எஃகின் மரந்தனில் மயில்ரூபமாயிருந்து
எங்கும் விளங்கிய செயினூரே
என்னேரமு மறவா முஹம்மதமீது
எழியன் றுயராதைத் தீர்பீரே (ம)

---

திருப்புகழெங்கு முளங்கும்—என்ற மெட்டு

பல்லவி

கஸ்தூரிவாசங் கமழும்நாதா
கண்யா நற்புண்யா லாவண்யா
ஹபீபிரசூல் செயினூரே (கஸ்)

சரணநுபல்லவி

1\. ஆமினா வீன்றபாலா
அற்புத குணசீலா
அன்புட னின்பமாய் தென்புட
னெந்தனைக் காப்பீர் (கஸ்)

2\. மதினா நகர்க்கரசா
மனமுள்ள விசுவாசா
மதியை யழைத்த மஹாராஜ
மானந்த மஹ்மூது நபியே (கஸ்)

3\. நாளை மகுஷரில்
நட்புட னென்பேரில்
நாதா நன்னீதா மஹ்மூதா
இருபைசெய் யஹ்மதே (கஸ்)

4\. சற்குண முடையனடி
சன்கை பெறத்தேடி
சந்ததம் சிந்தனை சொந்தமுட
னுமதருள் புரிகுவீர் (கஸ்)

5. ஜெயவீர நகர்வாசன்
செந்தமிழ் வித்வதாஸன்
சிறியேன் முஹம்மத தமீது
தாஸன் றுயரதைத் தீர்ப்பீர் (கஸ்)

---

## பாபுவிபுனச் சந்திரபாலன்—என்ற மெட்டு

### பல்லவி

மதினாவாழும் நாதா—மிக்க
மதியையழைத்த நீதா (திரு)

### அநுபல்லவி

வெகு—மாக்ஷிமை தங்கிய ரக்ஷகநன்னபி
காக்ஷி கொடுத்திடுங் கண்மணியே திரு (மதி)

### தொகையறா

வங்காபிர்களை தீனிஸ் லாமாக்கிய
வள்ளலிரசூல் மணியே
பொங்குமல் புருக்கானை நிலைநாட்டிய
புதுமையான கனியே

### பாட்டு

மயில்வடிவா யிருந்தோர்—எல்லீன்
மரந்தனிலே தரித்தோர்—ராஜ
முத்து முஹம்மது ரெத்தினமே யென்னை
யித்தினம்ரெக்ஷித் தருள்புரிவீர் திரு (மதி)

### தொகையறா

அப்துல்லாவி னருந்தவத் தாலுதித்த
அற்புதமான ராஜா
எப்பொழுது முமைநாடும் யன்பரை
ரெக்ஷிக்கும் நேசா

பாட்டு

ஜெயவீர நகர்வாசன்—கவி
செந்தமிழ் வித்வதாஸன்—ஹமீத்
செப்புங்கவியது தழைத்துமே யோங்கிட
செய்பதி ரசூலே கிருபைசெய்வீர் திரு (மதி)

கழுகுமலைக்கும் நாம் நேராய்—என்ற மெட்டு

பல்லவி

ராஜநபியேநீர் வாரீர் தங்கள்
நளினமலர்பாதந் தந்தெனையாழ்வீர் (ரா)

அநுபல்லவி

ரஜபங்கிர்த திருமதமொழியும்
விஷமத்தனங்களை நீக்கிடும் (ரா)

பக்தர்களுக்கி ரங்கிடும்வாசா
முத்திபதந் தந்திடும் நேசா (ரா)

நாளைமகுஷரி லுதவிகள் புரிவீர்
மூளையுருகா திருக்கெனையாழ்வீர் (ரா)

பதுரிப்படையினில் பகைவர்நடுங்க
மதுரிதநீன்பயி ரெங்கும்விளங்க (ரா)

சரணம்

1. அப்துல்லா வின்றிரு அருந்தவபாலா
அழகிய கதிஜாமறிய மணவாளா
அருமை புருக்கான் மறைநூலா
அலிமா மூலையுன் னு மழகியசீலா
திக்குத்திசை யெங்கினும்
மிக்கப்புகழ் தங்கிடும்
மக்கப்பதியி லமர்ந்திடும்
ஹக்கன்திரு தூதரான (ரா)

2. மதியையமைழத்த மஹ்மூது நாதா
மதினாவையாண்ட மஹிபரே நீதா
மருத்துவத்தீன் சிறந்திடும் வேதா
மகிழும்படிபிர சங்கமே போதா
ஜெயவிர நகரினில்வாசன்
செந்தமிழ் வித்வரின் நேசன்
சிறியேன் ஹமீது தாஸன்
செய்யதி ரசூலே கார்க்க (சா)

## அண்ணலே நீரல்லால் என்ற சிந்து மெட்டு.

### கண்ணிகள்

1. அண்ணல் முஹம்மது நன்னபியே யெனைக்
கார்ப்பீரே துயர் தீர்ப்பீரே—நானே
அவஸ்தை படும்போது யன்புடனெந்தனைப்
பார்ப்பீரே சுவனஞ் சேர்ப்பீரே (அண்)

2. கபுரில்முன்கர் நக்கீர் கணக்கிலே யான்பாக்கி
யாகுமோ வெகு வாகுமோ—அந்தக்
கவலையை நீக்கியே காக்ஷிகொடுப்பீரே
கண்யமே சா பல்யமே (அண்)

3. நாளைமருஷரில் மூளையுருகாம
லாக்குவீர் மேல சாக்குவீர்—மிக
நற்பாக ஹெளலுல் கௌதராற்று நீரை
புகற்றுவீர் குடிப் பாற்றுவீர் (அண்)

4. சிராத்துல் முஸ்தகீம் சிரப்பான பாலத்தைக்
கடக்கவே மிக நடக்கவே—அருள்
செய்குவீரேயா செய்யதிரசூலென்
நாயகா திருத் தாயகா (அண்)

5. திருச்செந் தமிழ்பாடிடுஞ் சிறியேன் ஹமீதைக்
காருமே தினங் காருமே—வெகு
திவ்யகுண ராஜசிங்கமே யெழியெனைப்
பாருமே கலி தீருமே (அண்)

77066

சித்தானந்தாகுகா—என்ற மெட்டு.

பல்லவி

ஞானனந்தா மெய்பொருள் நவநீத மஹாராஜ
தவயோகி யானநேச சற்குரு வேவுல்லாச (ஞா)

அநுபல்லவி

மோனப்ர காசவள்ளல் முஹம்மதி ரசூலேநாதா
மோக்ஷவழி காட்டுமேந்தா முன்னவன் திருதூதா

மகுடம்

பக்ஷதாபத்துடன் யிக்ஷணம் வருகுந் திரு (ஞா)
பாரெங்குந் தீன்பயிரெங்கும் விளங்குந் திரு (ஞா)
பதாரதில் படையது நடுங்கிட
மதுரிதமொழி யெங்குமுழங்கிட திரு (ஞா)
படைத்தவன் பாங்குள்ள தூதர் பயஹரம்பர நாதர்
பாலனின் முகம் பார்த்திடும் வேதர் திரு (ஞா)

தொகையறு

கானக மானுக்குத் துணையாக நின்றிட்ட
காரணமுள்ள நாதா
ஞானக்கல்வியைத் தந்துமே யெந்தனுக்
கருள்புரிகுவீர் வேதா

பாட்டு

பதமலரடி நிதம்பணிந்திடும்
சதமெனத் துதிகள் மொழிந்திடும்
பாவலன் முஹம்மதமீத் பக்தித்தேன்
தாளடிமுத்தித்தேன் நித்தம் நத்தினேனின்ப (ஞா)

## ஒலிகள் நாயகம் குத்புல் அக்தாப் முஹையத்தீன் அப்துல்காதிர் ஜெயிலானியவர்கள்மீது பாடிய பாடல்.

மூர்த்தியாய் வந்துதித்த—என்ற மெட்டு.

பல்லவி

செய்கப்துல் காதிர்க்கினை
ஜெகமதிலாரு யாரு யாரு யாரு (செய்)

சரணுநுபல்லவி

1. செய்ஹும்மாதின் சூகை
சிறப்பாய் யாக்கும்வாகை
சிங்கமஹா மேருவே
சிறியெனைக்காரு காரு காரு காரு (செய்)

2. ஒலிகளுக்கு மேலொலியே
உயர்வான யென்கனியே
ஒன்றுமரி யர்தபாலன்
ஏழையைப்பாரு பாரு பாரு பாரு (செய்)

3. பாத்திமா வின்பாலரே
பயஹாம்பரின் பேரரே
பாங்கான சுவர்க்கமதில்
பாலனைச்சேரு சேரு சேரு சேரு (செய்)

4. ஜெயவீர நகர்வாசன்
செய்யதிபு ருஹிம்புத்ரன்
சிறியேன் ஹமீத்தாஸனை
ஜெம்மமேலேகோரு கோரு கோரு கோரு (செய்)

காதலுற்றேன்களி—என்ற மெட்டு.

பல்லவி

பாத்திமாவின்றிரு பாலரே யெனைப்
பார் பார் பாக்கியரே (பார்)

சரணாநுபல்லவி

1. பார்புகழும் பகுதாதுநகர் வாழும்
பண்புள்ள நற்குணசீல ரேயுமை
பணிந்திட்ட பாலனை நீர் நீர்
பாங்கான சுவர்க்கத்தில் சேர் சேர் (பா)

2. ஹம்மாதின் கைகூகையை நீக்கிய
காரணமுள்ள யாபீரேயிங்கு
கஷ்டபடுவோனைக் கார் கார்
கவலையை நீக்கிடு வீர் வீர் (பா)

3. பனிரெண்டாண்டு முன்மூழ்கிய கப்பலை
பாரினிலே யழைத்துக் காட்டிய
பண்புடையோரே சார் சார்
பாலன்றுய ரதைத்தீர் தீர் (பா)

4. ஜெயவீரநகர் செய்யதிபுராஹிம்
செல்வபுதல்வன் ஹமீதுதாஸனை
சிறப்புடனே வந்து சீர் சீர்
செய்கப்துல் காதிர்யா பீர் பீர் (பா)

யாரசூலுல்லாஹபீபே—என்ற மெட்டு

பல்லவி

ஆதியிறையோன் றாதரெங்கள்
அஹமதிரசூல் போரே (ஆதி)

அநுபல்லவி

அஹமதிரசூல் பேராரே யெங்கள்
அன்னை பாதநிமா பாலரே (ஆதி)

தொகையறு

பகுதாது நகர் தனி லவதரித்த
பாக்கியமான யாபீரே
பரத வித்தழையுபிர்தப்
பாலனைக்காக்க வருவீரே

பாட்டு

ஹம்மா நின் கைகூகை நீக்கிய
காரணமுள்ள யாபீரே
கவலையால் நொந்தலையுமிந்த
கசடனின்முகம் பார்ப்பீரே (ஆதி)

தொகையறு

இறந்தமேதார் மையித்துக் குயிர்பிழைக்கச்செய்
ஏகாந்த சற்குரு நாதா
இச்சிறு பாலனைக்கார்க்க இறைமேயானிட
மன்றுடுவீர் நீதா

பாட்டு

ஜெயவீர நகரினில் வாழ்
சிறியெனைக் கார்ப்பீரொலி
செந்தமிழ் ஹமீது தாஸன்
றுயரதைத் தீர்ப்பீரொலி (ஆதி)

---

வீரநகரைச்சேர்ந்த கீழயன்பதியிலடங்கியிருக்கும்,
செய்யதிபுருஹி மொலிமீது பாடிய துதி.
யாரசூலுல்லாஹபீபே—என்ற மெட்டு.

பல்லவி

சீர்த்திமி குந்கிழ பதியிலமைந்த
செய்யதிபு ருஹீமொலி (சீர்)

அநுபல்லவி

செய்யதிபு ருஹீமொலி தீன்
செழிக்கச் செய்தயாலுலி (சீர்)

சரணங்கள்

1. பாண்டியனின் படைநடுங்க
பாரில்தீன் பயிர்விளைத்தவா
பாங்குடனே பரியிலேரி
பாலனைக் கார்ப்பீரொலி (சீர்)

2. பகைவரின் ஞனியம்வராமல்
படைத்தோனிட மன்றுடுவீர்
பாங்குடனே பணியுமிந்த
பக்தனைக் கார்ப்பீரொலீ (ஓர்)

3. ஜெயவீர நகரினில்வாழ்
செய்யதிபு றுஹிம்புதல்வனும்
செந்தமிழ் ஹமீது தாஸன்
சிறியேன் றுயர் தீர்ப்பீரொலீ

---

இந்நூல் ஆசிரியரின் பிரதம சிஷ்யர்களிலொருவரும்,
மணஹுரைச்சேர்ந்த கழுகேர்கடை வாசியுமாகிய,
**K. S. காதர்பாக்ஷா பாடிய பாடல்.**

அம்பிகா உன்மகன்குகன் என்ற மெட்டு.

பல்லவி

அஹ்மதே நம்பினேன் சதம்
மஹ்மூதே வந்தருள் நீதம் (அ)

சாணுறுபல்லவி

1. ஆமினம்மா வீன்றபாலா
ஆயிஷாவை மணந்தலோலா
அடிபணிந் தேன்குணாளா
அடியே னிடர்க ளடிபடவருள் (அ)

2. குறைஷக்குல நவமணியே
குபிரையடக் குநகலியே
குயிலோசை யின்தொனியே
குழந்தை படுந்துயரைத் தீர்ப்பீர் (அ)

3. புருக்கின்மே லேறும்நாதா
புருக்கானின் மறைவேதா
பிழையைப் பொருத் தாளும்நீதா
பேசும் வாசு ராஜநபியே (அ)

4. கமுகேர் கடைவாசன்
காதர்பாக்ஷா தாஸன்
கசடன்முகம் கார்ப்பீர்நேசன்
கன்மி பாவம் பொருத்தாளுவீர் (அ)

தீரவீர சிங்காரா—என்ற மெட்டு.

பல்லவி

மக்காவிலே பிறந்து மதினாவை யாண்டோரே
மங்கை கதிஜாவின் மணவாளரே (ம)

தொகையறு

தக்கோனின் திருதூதரான தாஹாயெனு மணியே
மிக்கப்புகழ் தங்கிய மேன்மையான கனியே

பாட்டு

கானக மானுடும்பின் கஷ்டங்கள் நீக்கியோரே
ஞானப் பதவிதந்து ஆழ்வீரே (ம)

தொகையறு

வானவர்கள் போற்றிடு மருத்துவமான ராஜா
மோனதயாபர குணசீலராகிய முஸ்தபாவெனும் நேசா

பாட்டு

ஜெயவீர மாநகர் செந்தமி ழுமீர் தஞ்சீஷன்
செப்பிடுங் காதர்பாக்ஷா தாஸன் (ம)

இந்நூலாசிரியரின் பிரதம சிஷ்யர்களிலொருவரும்
திருவீரநகர வாசியுமாகிய,

**K. M. முஹம்மதுகனி தாஸரவர்களால்,**

**இயற்றிய பாடல்கள்.**

சரசக்காரமா—என்ற மெட்டு.

பல்லவி

திருமதினா வாழும் நாதா—ஆதி
இறையவன்திரு தூதா திரு (மதி)

அநுபல்லவி

தங்கள் திருமலரடி யநுதினந்துதி
சிரியவன் மிடியகன்றிடவருள் திரு (மதி)

தொகையறு

திக்கெங்குந் தீன்பயிர் விளைத்தநற்
சின்மய மிருந்த நாதா
ஹக்கனினருள் பெற்றுகங் குல்மதியைக்
காரணமாயழைத்த நீதா

பாட்டு

அடிமை யென்மிடிதீர—அருள்
அநுதினம்புரி வீரே—ராஜ
அண்ணலே பூவினில் தங்கள்பதமதை
நன்னயமுடனே போற்றினேன் திரு (மதி)

தொகையறு

மஹ்ஷரி மாந்தர்கள் மூளையுருகியே
மயங்கியே நிற்கும்வேளை
தகமையுட னடியெனை ரெக்ஷித்தாண்டருள்
சதானந்த மிகும்பொருளே

பாட்டு

தாரணி யெங்கினும் புகழும்—வீர
மாநகர்ந்தனில் வாழும்—நின்
தாசனயிர் தஞ் சீஷனுங்கனி
தமிழ்பாடி மகிழ்ந்து போற்றினேன் திரு (மதி)

---

வண்டருளுந் தண்டமறை முடியோனே—என்ற மெட்டு.

கண்ணிகள்

1. மானிலம் புகழுங்குரு மஹ்மூதா—திரு
மாக்ஷிமை துலங்கவரு மிறைதூதா—இந்த

திக்குள்ளோர்கள் போற்றுஞ் சிங்கம்
தின்பயிர் விளைத்த தங்கம்
சிந்தை மகிழ்ந்தென்னை யாளும்
சின்மய நீதா (மானி)

2. தஞ்சமென்று தங்கள்சரண் பணிந்தேனே—பிர
பஞ்சமாய் கையிற்சிக்கி யுழன்றேனே—கொடிய
வஞ்சக மனத்துடைய
கஞ்சன புஜகில்படை
பஞ்சாகப் பறக்கும்படி
பதுரில் வென்றவா (மானி)

3. நாளைமஹஷரினில் வரும்நாதா—இந்த
வேழையெனக் கருளே தினந்தாதா—நான்
எந்த நாளுந் தங்கள்பதம்
சிந்தைமகிழ்ந் தேற்றினேனே
வந்தருள் புரிவீர்
திரு மஹ்மூதா (மானி)

4. பாண்டியனுண்ட வீரமாநகர்வாசன்—சிறு
பாவலனமிர்தக்கவிக் குஞ்சரம்சீஷன்—செல்வ
பாலகன் முஹம்மத்கனி
பாடிடுஞ்செந் தமிழுக்கு
பண்புட னருள்புரியும்
பாக்கிய நாதா (மானி)

---

## சுயராக்ஷியமதிக தூரமில்லை—என்ற மெட்டு.

### கண்ணிகள்

பாரோர்புகழுந்திரு பாங்கான நன்னபியே
பாலனெந் தென்னையாளுந் தயாநிதியே
பிரபஞ்ச மாய்கையில் சிக்கியிகவுழலும்
பரிதாபம் நீக்கவேணுந் தீன்நபியே (பா)

தொகையறு

சண்டன புஜகில் படையைச் சமர்தனில்
தாக்கியே வென்ற நாதா
மண்டலமீதினில் தீன்பயிர் விளைத்தசன்
மார்க்கம் நிறைந்த வேதா

பாட்டு

மக்கநகர்பிறந்து மதினா நகரையாளும்
மகத்துவ மேமிகுந்த யாநபியே
மங்கைகதிஜா ஆயி ஷாவை மணம்புரிந்த
மஹராஜ மானமுஸ்த பாநபியே

தொகையறு

ஹபீபரசன் முன்தகையைப் பெண்ணுருவாக்கிய
காரணம் விளைத்த சிங்கமே
கானில்வாழ் மானுடனுறை பேசிடுந்
கஸ்தூரி வாசத்தங்கமே

பாட்டு

வஞ்சமிடாசகல வள்ளல் நன்னபிமீது
வாகுடனேசித்ரக் கவிமொழிந்தேன்
தஞ்சமெனவே நம்புந் தாஸனமீர் தஞ்சீஷன்
தமியன் முஹம்மத்கனி சரண்பணிந்தேன் (பா)

---

கண்மணி கல்பிலுயர்ந்த—என்ற மெட்டில் பிரிவு.

பல்லவி

யாநபி—யாஸீன் முஹம்மதான தீன்நபி (யா)

அநுபல்லவி

நானிலமெங்கும் புகழ்ந்திடும் நீதா
தீன்பயிரெங்கும் விளைத்த சற்போதா

சரணம்

1. கந்தங்கமழ் நபியே
ஹாஷிங்குல மர்சிதியே
காரணரே யருள் தாருங் செங்கனியே
கஸ்தூரிவாசங் கமழுமாமணியே (யா)

2. மாமறைமு ழங்குங்குங்கோவே
மன்னவர்கள் போற்றுந்தேவே
மங்குடையிடும் ராஜநன்னபியே
மாக்ஷிமை தந்தெனை யாளும் பொற்கனியே (யா)

3. புண்ணிய மிகுந்தசீலா
பூவையாமி னவின்பாலா
பூவினிலாதார மேதுயித்ததியே
பாலனை ரெக்ஷித்தாழ் முழுமதியே (யா)

4. மாவீர நகரில்வாசன்
மைந்தன் மிர் தஞ்சீஷன்
மண்டலமெங்குந் துலங்கிடும் வேதா
தொண்டன் முஹம்மத்கனிக்கருள்தாதா (யா)

மங்கையே மனந்தாளாது—என்ற மெட்டில் பல்லவி வேறு.

பல்லவி

மக்கமதினு நகர்க்கரசே அரசே அரசே (மக்)

சரணுநுபல்லவி

1. திக்கோர் புகழும் நாதா
தீன்பயிர் விளைத்தவேதா
செய்பதி ரக்ஷெனமேல் வாதா வாதா வாதா (மக்)

2. அப்துல்லா தவமணியே
ஆமீனர் குலக்கனியே
ஆழ்ந்தகுணமுள்ள கண்மணியே மணியே மணியே (மக்)

3. வங்காபிரை வென்றோரே
வல்லோன் றிருத்து தரே
வாகுடன்தீன் விளத்தோரே தோரே தோரே (மக்)

4. கஹறோர்க் கதிபதியே
ஹாஷிங்குல மாநிதியே
காரணம் விளத்தபொற் கனியே கனியே கனியே (மக்)

5. மாவீர நகரில்வாசன்
மைந்தன யிர் தஞ்சீஷன்
முஹம்மதுக்கனி தமிட்க்கருளே அருளே அருளே (மக்)

முற்றிற்று.